**தலைப்பு 18 – பாராளுமன்றத்தின் பிரதான அரசாங்க கொறடாவின் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன பாராளுமன்றத்தின் பிரதான அரசாங்க கொடராவின் அலுவலகத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 18- பாராளுமன்றத்தின் பிரதான அரசாங்க கொடராவின் அலுவலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 27 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பாராளுமன்றத்தின் பிரதான அரசாங்க கொரடாவின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை** | | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளை களுக்கு இணங்க இணங்காமல் அல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்( | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிராமை. | 2.1.1 |
| | | 2. | பெறுகைகள் திட்டம் உரிய முறையில் திட்டமிடப்படாமை. | 2.2 |
| | | 3. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.5 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | இணக்கமின்மைகள் | 2.6 |
| | | 2. | மனிதவள முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.7 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது | | பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.2.4 |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | | |
| 127(7) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல். | நட்டங்கள் மற்றும் இழப்புகள் | 2.3 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது சட்ட வரைபுகள் மற்றும் 32 முன்மொழிவுகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், ஆளும் கட்சியின் 18 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் போது அலுவலகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 15 பிரதான பணிப்பொறுப்புக்கள் காணப்பட்டதுடன், எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், (Activity Plan) அமுல்படுத்தப்பட்ட கால எல்லை (Time Line) மற்றும் அந்த பணிகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் (Outcome) மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் (Imprest Requirement Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

### 2.2.1 பெறுகைகளை திட்டமிடல்

அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகைகள் நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,600,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 1,473,519 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏற்படு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு தொடர்பில் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைகள் திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

**(அ) பிரதான பெறுகைகள் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய 03 வருட காலப்பகுதிக்கான எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த உத்தேச பெறுகைகள் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கமைய வருடாந்த உத்தேச பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 ஆகிய வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் பெறுகைகள் செயல்வழிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் பெறுகைகள் செயல்வழிக் கோவையின் அதற்குரிய மாதிரிக்கமைய பெறுகைகள் திட்டமொன்றினூடாக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கான பெறுகைகள் கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒவ்வொரு பெறுகை நடடிக்கையையும் நிறைவேற்றுவதற்கு உத்தேசித்துள்ள கால அட்டவணை குறிப்பாக இனங்காணப்படாத பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வருடாந்த மதப்பீட்டு நிதியேற்பாட்டிற்கமைய பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகளுக்காக ரூபா 1,000,000 தொகையான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு அந்த திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.2 (அ), 5.3.10(அ), 6.3.1(ஆ) ஆகிய வழிகாட்டிக்கமைய ரூபா 408,622 கூட்டுத்தொகையான பெறுகைகள் தொடர்பில் பொருட்களில் விபரங்கள், அளவு ஒப்படைக்கப்பட்ட நேரம், இடம் பொறுப்பு, செல்லுபடியான விலைக்கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டிய கால் எல்லை மற்றும் அனைத்து விலைக்கேள்விகளும் முத்திரையிடப்பட்ட உறையொன்றின் கீழ் சமர்ப்பிக்கப்பட வெண்டிய விடயங்கள் வழங்குனர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த விலைக்கேள்வி கோரல் ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.3 மற்றும் 6.3.6 ஆகிய வழிகாட்டிகளின் பிரகாரம் விலைக்கேள்வியை பிரசித்தமாக திறத்தல் மற்றம் பெறுகைகள் செயல்வழிக் கோவையின் காணப்படுகின்ற உரிய மாதிரிப் படிவங்களில் அந்த பணிகளை அறிக்கையிடல், அந்த அறிக்கைக் குறிப்புக்களை திறத்தல் குழுவின் அனைத்து அங்கத்தர்களாலும் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும், அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா 408,622 தொகையான பெறுகைகளுக்காக பெறப்பட்ட விலைக்கேள்வி திறத்தல் பணிகள் அந்த ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டிராததுடன், இந்த பணிகளை நிறைவேற்றுவதற்குரிய விலைக்கேள்வி திறத்தல் மற்றும் மதிப்பாய்வு குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகைகள் கைநூலின் 7.11.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் பயன்படுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிக்கமைய விலைக்கேள்வி மதிப்பீட்டு நடைமுறை நிறைவு செய்யப்பட்டவுடன் உடனடியாக விலைக்கேள்வி மதிப்பீட்டு அறிக்கைகள் பெறுகைகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

### 2.3 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

நிதிப்பிரமாணம் 104 மற்றும் 109 இல் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய பொது 283 இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை பொது 284 இன் பிரகாரம் இறுதி அறிக்கை மற்றும் பொது 285 இன் பிரகாரம் நட்டமொன்று புத்தகத்திலிருந்து பதிவழிப்பதற்கான விண்ணப்ப படிவம் ஆகிய அறிக்கைகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நட்டத்தின் ரூபா 1,648,619.36 கூட்டுத்தொகையான மீளாய்வாண்டினுள் இடம்பெற்றிருந்த 04 வாகன விபத்துக்களுக்குரிய அந்த விபத்துக்கள் தொடர்பிலான அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியினுள் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| **2013** | மீண்டுவருபவை | 33.75 | 33.63 | 0.12 | 0.4 |
| | மூலதனம் | 0.95 | 0.86 | 0.09 | 9.7 |
| | **மொத்தம்** | **34.70** | **34.49** | **0.21** | **0.6** |
| **2014** | மீண்டுவருபவை | 36.75 | 34.23 | 2.52 | 6.9 |
| | மூலதனம் | 12.65 | 1.56 | 11.09 | 87.7 |
| | **மொத்தம்** | **49.40** | **35.79** | **13.61** | **27.6** |
| **2015** | மீண்டுவருபவை | 38.45 | 38.01 | 0.44 | 1.1 |
| | மூலதனம் | 1.85 | 1.28 | 0.57 | 30.8 |
| | **மொத்தம்** | **40.30** | **39.29** | **1.01** | **2.5** |
| **2016** | மீண்டுவருபவை | 42.15 | 41.80 | 0.35 | 0.8 |
| | மூலதனம் | 1.45 | 1.14 | 0.31 | 21.4 |
| | **மொத்தம்** | **43.60** | **42.94** | **0.66** | **1.5** |
| **2017** | மீண்டுவருபவை | 61.19 | 60.47 | 0.72 | 1.2 |
| | மூலதனம் | 1.60 | 1.21 | 0.39 | 24.4 |
| | **மொத்தம்** | **62.79** | **61.68** | **1.11** | **1.8** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

மீளாய்வாண்டின் போது 04 மூலதன செலவின விடயங்களுக்காகவும் 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ரூபா 1.77 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 0.43 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 14 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.5 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

அலுவலகத்தினால் பிணைகள் பதிவேடு பேணப்பட்டிராததுடன், ஏனைய பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேட்டு வகை** | **உரிய பிரமாணம்** | **அவதானிப்புகள்** |
|---|---|---|---|
| (அ) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கணனி, உப பாகங்கள் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆம் பிரிவு | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பொருட் பதிவேட்டு புத்தகம் | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | கடமைத் தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(1) | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | அடியிதழ் சேர் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 இணக்கமின்மைகள்

### 2.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 227 | 1,230,299 | மீளாய்வாண்டினுள் 1302 செலவின தொகுதியின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய செலவினமொன்று 2002 செலவின விடயத்தின் கீழும் 1003 செலவின விடயத்தின் கீழும் கணக்கு வைக்கப்பட வேண்டிய செலவினமொன்று 1001 செலவின விடயத்தின் கீழும் கணக்கு வைக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி, 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(I) ஆம் இலக்க சுற்றறிக்கை, 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | 3,314,964 | நாளாந்த கடமை நேரத்தின் பின்னர் செலுத்தப்படும் படிகளுக்காக காலம் அடிப்படையாக கொள்ளப்படுமாயின் அந்தக் காலம் விரலடையாள பதிவு செய்யும் இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறல்லாது அலுவலகத்தினால் ரூபா 3,314,964 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

### 2.7.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான, அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக அலுவலகத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 45,700,595 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

| ஆளணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 04 | 04 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 15 | 13 | 02 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 17 | 17 | - |
| (v) | அமைய / ஒப்பந்தம் | 01 | - | 01 |
| | **மொத்தம்** | 42 | 39 | 03 |

அலுவலகத்தின் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பணிகளை மேற்கொள்ள தேவையான பதவியணி இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் 03 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அலுவலகம் தவறியிருந்தது.